# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2013 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பிறப்புகள், இறப்புகள் பதிவு (திருத்தச்) சட்டம்*

---

*(2013 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

*2013,* மே மாதம் *10* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 5.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2013 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பிறப்புகள், இறப்புகள் பதிவு (திருத்தச்) சட்டம்**

[2013 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ-17/2013

**(110 ஆம் அத்தியாயமான) பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பிறப்புகள், இறப்புகள் பதிவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2013, சனவரி 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*(110 ஆம் அத்தியாயமான) பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் 24ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) (110 ஆம் அத்தியாயமான) பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் 24 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''அத்தகைய ஒவ்வொரு வெளிப்படுத்து கையும்'' என்னும் சொற்களிலிருந்து, ''முத்திரைகள் வெளிப் படுத்துநரால் வழங்கப்படுதல் வேண்டும்.'' என்பது வரையான சொற்களுக்குப் பதிலாக, ''அத்தகைய வெளிப்படுத்துகை ஒவ்வொன்றும் ஐம்பது ரூபா கட்டணம் ஒன்றையும் அல்லது அமைச்சரால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகையையும் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும். இது வெளிப்படுத்துநரால் செலுத்தப்படுதல் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவானது அப்பிரி வின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''இரண்டு ஆண்டு காலப்பகுதி அவ்வாறு கழிந்திருப்பின்'' என்னும் சொற் களிலிருந்து, ''விண்ணப்பகாரரினால் வழங்கப்பட்ட முத்திரை ஒன்றை கொண்டிருத்தல்.'' என்ற வரையான எல்லாச் சொற் களுக்கும் பதிலாக, ''விண்ணப்பகாரரினால் செலுத்தப்பட வேண்டியதான ஐம்பது ரூபா கட்டணம் ஒன்றையும் அமைச்சரால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகையை யும் கொண்டிருத்தல்.'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

2-PL 007080-1115 (2013/03)

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவினைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவானது அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் ''அத்துடன் விண்ணப்பகாரரால் வழங்கப்பட்ட ஐந்து ரூபா பெறுமதி கொண்ட முத்திரை ஒன்றையும் பதிவின் உள்ளீடு பற்றிய எண்பிப்பாக பிறப்புப் பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''விண்ணப்பகாரரால் செலுத்தப்படவேண்டிய ஐம்பது ரூபா கட்டணம் ஒன்றையும் பதிவின் உள்ளீடு பற்றிய எண்பிப்பாக பிறப்பு பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28ஆம் பிரிவானது அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

> ''(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஐந்து ரூபா கட்டணம் அல்லது அமைச்சரால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகையுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும். இது விண்ணப்பகாரரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 36ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''அத்தகைய ஒவ்வொரு வெளிப்படுத்துகையும்'' என்னும் சொற்களிலிருந்து ''முத்திரையானது வெளிப்படுத்துநரால் வழங்கப்படுதல் வேண்டும்.'' என்னும் சொற்கள் வரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக ''அத்தகைய ஒவ்வொரு வெளிப்படுத்துகையும் ஐம்பது ரூபா கட்டணம் அல்லது அமைச்சரால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகையையும் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும். இது வெளிப்படுத்துனரால் செலுத்தப்படுதல் வேண்டும்.''. என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52ஆம் பிரிவானது அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் ''ஒரு ரூபா பெறுமதியான முத்திரை ஒன்றைக் கொண்டிருத்தல்'', என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஐம்பது ரூபா அல்லது அமைச்சரால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகை என்பவற்றுடன் சேர்த்து அனுப்பப் படல்,'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 61ஆம் பிரிவானது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 61ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் ''அத்துடன் இச்சட்டத்தின் கீழ் அறவிடப்படற்பாலதான அத்தகைய வெளிப்படுத்துகை தொடர்பில் முத்திரைத் தீர்வை ஒன்றின் தொகை'' என்னும் சொற்களிலிருந்து ''அல்லது எந்த இராஜதந்திர, தூதரக அல்லது வியாபார பிரதி நிதிகள் முன்னர் வெளிப்படுத்துகை ஒன்று செய்யப் பட்டதோ அந்த இராஜதந்திர, தூதரக அல்லது வியாபார பிரதிநிதிகளுக்கு செலுத்தப்படுதல் வேண் டும்'' என்பது வரையான எல்லா சொற்களுக்கும் பதிலாக ''அத்துடன் இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான அத்தகைய வெளிப்படுத்துகை தொடர்பிலான கட்டணங் களில் தொகை ஆனது பதிவாளர் தலைமையதிபதி அல்லது தோதான மாவட்ட பதிவாளருக்கு அனுப்பப் படுதல் வேண்டும். அவர் அதனை எந்த இராஜதந்திர, தூதரக அல்லது வியாபார பிரதிநிதிகள் முன்னர் வெளிப்படுத்துகை ஒன்று செய்யப்பட்டதோ அந்த இராஜதந்திர, தூதரக அல்லது வியாபார பிரதிநிதிக ளுக்குச் செலுத்துதல் வேண்டும்''; என்னும் சொற்களை யும்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''தகுந்த பெறுமதி யுடைய முத்திரை ஒன்றை கொண்ட'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''தகுந்த பெறுமதியுடைய கொடுப்பனவின் பற்றுச்சீட்டொன்றைக் கொண்ட''. என்னும் சொற்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*செல்லுபடி யாக்குதல்.*

**9**. இரண்டாயிரத்துப் பதின்மூன்றாமாண்டு சனவரி 1ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்ட தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது, விதிப்பதற்கு அல்லது சேகரிப்பதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் நோக்கத்துக்காக பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பில் அல்லது இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் விதிக்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட எவையேனும் கட்டணங்கள், பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய எவரேனும் ஆளினால் செல்லுபடியான முறையில் விதிக்கப்பட்டதாக அல்லது சேகரிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், மேற்கூறப்பட்ட காலப்பகுதியின் போது விதிக்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட ஏதேனும் கட்டணம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**10**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையை மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்